# யூன் – 11- பொதுக்கால 10ம் வார ஞாயிறு

## மூவொரு கடவுள் - பரம திரித்துவம்

**தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்.யோவா.3:16**

## முதல் வாசகம்: விடுதலைப் பயணம் 34:4 – 6,8 - 9

அக்காலத்தில், மோசே முன்னவை போன்ற இரண்டு கற்பலகைகளை வெட்டி எடுத்துக்கொண்டார். ஆண்டவர் தமக்கு கட்டளையிட்டபடி, அதிகாலையில் எழுந்து சீனாய் மலைமேல் ஏறிச்சென்றார். தம் கையில் இரு கற்பலகைகளையும் கொண்டு போனார். ஆண்டவர் மேகத்தில் இறங்கி வந்து, அங்கே அவர் பக்கமாய் நின்றுகொண்டு, ”ஆண்டவர்” என்ற பெயரை அறிவித்தார். அப்போது ஆண்டவர் அவர் முன்னிலையில் கடந்து செல்கையில், ”ஆண்டவர்! ஆண்டவர்! இரக்கமும் பரிவும் உள்ள இறைவன் சினம் கொள்ளத் தயங்குபவர் பேரன்பு மிக்கவர் நம்பிக்கைக்குரியவர். உடனே மோசே விரைந்து தரைமட்டும் தாழ்ந்து வணங்கி, ”என் தலைவரே! நான் உண்மையிலேயே உம் பார்வையில் தயை பெற்றவன் என்றால், இவர்கள் வணங்காக் கழுத்துள்ள மக்கள் எனினும், என் தலைவரே! நீர் எங்களோடு வந்தருளும். எங்கள் கொடுமையையும் எங்கள் பாவத்தையும் மன்னித்து எங்களை உம் உரிமைச் சொத்தாக்கிக் கொள்ளும்” என்றார்.

**பதில்பாடல் :** என்றென்றும் நீர் புகழப் பெறவும் ஏற்றிப் போற்றப் பெறவும் தகுதியுள்ளவர்

## இரண்டாம் வாசகம் : 2 கொரிந்தியர் 13: 11 - 13

சகோதர சகோதரிகளே, இறுதியாக நான் உங்களுக்குச் சொல்வது மகிழ்ச்சியாயிருங்கள் உங்கள் நடத்தையைச் சீர்ப்படுத்துங்கள் என் அறிவுரைக்குச் செவி சாயுங்கள் மன ஒற்றுமை கொண்டிருங்கள் அமைதியுடன் வாழுங்கள் அப்போது அன்பும் அமைதியும் அளிக்கும் கடவுள் உங்களோடு இருப்பார். தூயமுத்தம் கொடுத்து ஒருவரை ஒருவர் வாழ்த்துங்கள். இங்குள்ள இறைமக்கள் அனைவரும் உங்களுக்கு வாழ்த்துக் கூறுகிறார்கள். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருளும் கடவுளின் அன்பும் தூய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக!

## நற்செய்தி : யோவான் 3 : 16 - 18

அக்காலத்தில் இயேசு நிக்கோதேமிடம் கூறியது: “தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார். உலகிற்குத் தண்டனைத் தீர்ப்பளிக்க அல்ல, தம் மகன் வழியாக அதை மீட்கவே கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினார். அவர்மீது நம்பிக்கை கொள்வோர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவதில்லை ஆனால் நம்பிக்கை கொள்ளாதோர் ஏற்கெனவே தீர்ப்புப் பெற்றுவிட்டனர். ஏனெனில் அவர்கள் கடவுளின் ஒரே மகனிடம் நம்பிக்கை கொள்ளவில்லை“ என்றார்.

**தியானம்:** கடவுள் மூன்று ஆட்களாய் இருக்கிறார். ஆனால் ஒரே ஆள் தன்மையில் விளங்குகின்றார் என்பதுதான் இறைவனைப்பற்றிய நம்முடைய கத்தோலிக்க விசுவாசத்தின் மறையுண்மை. ஒரே சித்தம், ஒரே வல்லமை, ஒரே ஆள்தன்மை என்ற ஒற்றுமையின் அடையாளமாக விளங்கும் இறைத்தன்மை நம்மையும் அந்த ஒரே இறைமையோடு ஒன்றிணைக்கின்றது. “இருக்கின்றவராய் இருக்கின்றவர்” (வி.ப.3:14) என்று தன்னை எக்காலத்திற்குமான இறைவனாக தன்னுடைய பெயரை வெளிப்படுத்திய கடவுள், கட்புலனாகாத கடவுளின் சாயலாக விளங்கிய இயேசுவை (கொலோ.1:15) பாவத்தில் வீழ்ந்த மனுக்குலத்தை மீட்டு, நிலை வாழ்வுக்கு அவர்களை உரியவர்களாக மாற்ற, இந்த உலகிற்கு அனுப்பினார். (யோவா.3:16) அவர் வழியாக சாவை அழித்து வாழ்வைக் கொண்டு வந்தார். அந்த வாழ்வின் வெளிச்சமாக, வழிகாட்டியாக தூய ஆவியை துணையாகக் கொடுத்தார். இன்றும் இந்த மூவரின் உடனிருப்பால்தான் திருச்சபை இயங்கிக் கொண்டிருக்கின்றது. ஒருமைப்பாட்டை உணர்த்தி நிற்கும் மூவொரு கடவுளின் திருவிழாவை கொண்டாடி மகிழும் நாமும் அந்த ஒருமைப்பாட்டை நமக்குள் காத்துக் கொள்ள வேண்டும். “உடல் ஒன்றே உறுப்புக்கள் பல, உடலின் உறுப்புக்கள் பலவாயினும் உடல் ஒன்றாயிருப்பதுபோல கிறிஸ்துவும் இருக்கின்றார். நாம் எல்லோரும் ஒரே தூய ஆவியால் ஒரே உடலாய் இருக்கும்படி திருமுழுக்கு பெற்றோம். (1கொரி.12:12-13) சாதி, இனம், மதம், மொழி, நாடு, கலாச்சாரம், பண்பாடு, பால் என்று மனிதனை பாகுபடுத்தி பிரித்துப் போடுகின்ற சக்திகளின் மத்தியில் நம்முடைய இறைவன் ஒற்றுமையின் கடவுளாக, ஒருமைப்பாட்டின் கடவுளாகத் தன்னை வெளிப்படுத்துகின்றார். “தந்தையே நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக” (யோவா.17:21) என்ற இயேசுவின் செபத்தினை தினமும் நினைவு கூர்ந்து நம்மோடு வாழும் சகோதர சகோதரிகளோடு வேற்றுமை பாராட்டாமல் இணைந்து வாழ்வோம்.